Sri M. K. SOMASUNDARAM : திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிவரை போக்கு வரத்து சாதனம் சரியாக இல்லாதபடியால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு பிரயோசனப்படும்படியாக திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி வரை ரெயில்வே லைன் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதைப்பற்றியும் அரசாங்கம் சிபாரிசு செய்திருக்கிறது.

Sri A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, சென்னை கடற்கரைப் பகுதியிலே திருவொற்றியூரிலிருந்து தெற்கே மற்றப் பகுதிகளை இணைத்து மின்சார ரயில் போடுவதற்கு ஏதாவது திட்டம் உண்டா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரி திட்டம் ஒன்றும் இல்லை

Sri P. S. K. LAKSIMPATHI RAJ : தென் இந்தியாவிலேயே, எழும்பூருக்கு அடுத்தபடி, பிரயாணிகள் அதிகமாக வந்து போகின்ற இடம் பழனி ஸ்டேஷன் ஆகும் எனவே பழனி திருப்பூர் ரெயில் லைன் அமைக்க சர்க்காருக்கு ஏதாவது குறி இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறு போட்டால் நலம் தான். ஆனால் சமீபத்தில் அது போடப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

Sri S. RAMALINGA PADAYACHI : சார், அரியலூரிலிருந்து சேலத்திற்கு ரயில் இணைப்பு போட வேண்டும் என்று ஜில்லா போர்டு ஒரு தீர்மானம் செய்து அரசாங்கத்திற்கு அனுப்பியது. அதில் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : ஒவ்வொரு அங்கத்தினரும் அவரவர்கள் ஜில்லாவைப் பற்றி கேட்க வேண்டும் என்றால் தனிக் கேள்வியாகக் கேட்கலாம்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் முக்கியமான இடங்களில் ரெயில் பாதை போடுவது அவசியம்தான். ஆனால் நான் முன்பு சொன்னபடி இவைகள் எல்லாம் மத்திய அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்படும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

[a]

Cancer centres

* 159 Q.—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of cancer centres existing at present in the State; and

(*b*) whether there is any proposal to open new cancer centres during 1957–58?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Two. The Barnard Institute of Radiology, Government General Hospital, Madras, in collaboration with the Government Hospital for Women and Children, Madras, forms one centre for treatment of cancer cases. The other is a private Cancer Institute at Adyar.

(*b*) None at present.

Photo Film Manufacturing Factory

* 160 Q.—Sri K. SATTANATHA KARAYALAR (on behalf of Sri N. K. Palanisami) : Will the Hon. the Minister for Industries be pleased to state with reference to the answer given on 10th

---

[a] Expunged on a motion adopted by the House—*vide* page 27 *infra*.

20th July 1957]

August 1956 to a supplementary question under question No. 24 whether the proposal to start a photo film manufacturing factory in the Nilgiris district has been finalised?

THE HON. SRI R. VENKATARAMAN : No decision has been taken by the Government of India so far on the proposal to establish a factory for the manufacture of raw photographic film in the Nilgiris district.

Kodaikkadu Reserve Forests

* 161 *Q.*—SRI A. VEDARATHNAM PILLAI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any report from the Forest Officer Kodaikkadu, regarding unauthorized hunting in the Kodaikkadu Reserve Forests; and

(*b*) if so, the action taken on the report?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A few instances of poaching at night in the Kodaikkadu Forest Reserve which has been closed to shooting for three years have recently been reported by the District Forest Officer. Following this the Government sanctioned the proposal of the Chief Conservator of Forests to appoint four extra Forest Guards for Special Protection to prevent poaching and ensure protection of wild life in the reserve.

SRI A. A. RASHEED : What are the wild animals that are protected in these forests?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முக்கியமாக " பிள்ளாரய் ", " பிளாக்பக் " மான்கள் ரகத்திலேயே ரொம்பவும் அபூர்வம். அதுவும் மறைந்து கொண்டே போகின்றது. அது முக்கியமாக பாதுகாக்கப்படவேண்டும் என்பதே அரசாங்கத்தின் கவலை.

SRI A. VEDARATHNAM PILLAI : இந்தக் காட்டில் ஏராளமாக இருந்த மான்கள் அனைத்தும் இம்மாதிரி திருட்டு வேட்டைக் காரர்களால் அழிக்கப்பட்டன. இன்னும் சில இருக்கின்றன. இவற்றைப் பாதுகாக்க இம் மாதிரி திருட்டு வேட்டைக்காரர்களுக்கு அளிக்கப்படும் துப்பாக்கி லைசென்ஸை ரத்து செய்து இந்த மிருகங்களை காப்பாற்ற முன் வருவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதைப் பற்றி நான் முன்பே சொன்னேன். இந்த மான் ரகம் குறைந்துகொண்டு வருகிறது. இதைப் பாதுகாக்கவும், மேலும் வளர்க்கவும் வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகின்றது.

SRI P. G. KARUTHIRUMAN : இந்த மான்களின் மாமிசம் மிகவும் ருசியாக இருக்கும். மாமிச பக்ஷிணியாகிய மனிதர்களே இதை சுட்டுக் கொன்று விடுகிறார்கள் என்பது கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சாதாரணமாக மான்களின் மாமிசம் ரொம்ப ருசியாக இருக்கும். கனம் அங்கத்தினர் அவர்கள் கூட இதை ருசி பார்த்திருப்பார்கள் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. கனம் அங்கத்தினர் போன்றவர்கள் இந்த " பிளாக் பக் " என்ற மான் வகையை கொன்றுவிடுகிறார்களோ என்று அஞ்சுகிறேன்.